**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 62/2015**

தேதி : 01.12.2023
பெயர் : சதிஷ்
த/பெ : ஜகன்நாத நாயுடு
வயது : 42
ஊர் : கொல்லக்குப்பம்
வா.சா : 2

**குறுக்கு விசாரணை**

**1.** நீதிமன்றத்தில் இருந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் அனுப்பப்படவில்லை. நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் வசிப்பதை நிரூபிப்பதற்கு உண்டான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு விவரங்கள் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது 3 ம் வாதி ஆனந்த நாயூடு கூறிதான் தெரியும் என்றால் இல்லை ஊர் மக்கள் கூறித்தான் எனக்கு விவரங்கள் தெரியும் நானும் அதே ஊரில் வசிப்பதால் தெரியும்.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள கிராம நத்த புறம்போக்கு நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 150/22, 150/24 மற்றும் 150/27 ஆகும். எனது சாட்சியத்தில் கூறியுள்ள சர்வே எண்கள் எனது பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சொத்துக்களின் சர்வே எண்களுக்கு உட்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தனிதனியாக தெரியாது மொத்தமாக அதன் விஸ்தீரணம் 18 செண்ட் ஆகும். 150/22, 150/24 மற்றும் 150/27 சர்வே எண்களுக்கு உட்பட்ட சொத்துக்களின் ஜக்குபந்தி மற்றும் நான்கு பக்க

அளவுகள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெ்ரியாது எனது தந்தைக்கு தான் தெரியும். எனது கிராம நத்த சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு தாவா சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் விவரங்கள் அனைத்தும் எனக்கு 3ம் வாதி கூறித்தான் தெரியும் என்றால் சரியல்ல. ஊர் மக்கள் கூறித்தான் தெரியும். இவ்வழக்கில் எஸ். பாபு 1ம் வாதி எனது சகோதரர் என்றால் சரிதான். அவர் எனது உடன்பிறந்தவர். எனது சகோதரர் இறந்த பின்பு எனது அண்ணியின் நகையை நான் திருடிவிட்டேன் என்று என்மீது புகார் உள்ளது என்றால் சாட்சி பதில் எதுவும் கூறவில்லை. (அவருக்கு இந்த கேள்விக்கு பதில் அளிக்காமல் இருப்பதற்கு விலக்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டது )சாட்சி பதில் எதுவும் கூறவில்லை.

3. வழக்கு தாவா சொத்து தாவா சொத்து கிராமத்தின் கிழக்கு பக்கத்தில் உள்ளது கிராமத்தின் மையப்பகுதியில் இல்லை என்றால் சரிதான். கிராமத்தின் மைய பகுதியில் வேப்பமரம் உள்ளது அதன் அருகில் திண்ணை கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாவா சொத்தினை ஒட்டியபடியே வடக்குப் பக்கத்தில் சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையின் சர்வே எண் 150/17 என்றால் தெரியாது. தாவா சொத்தில் கிணறு உள்ளதா என்றால் சரியல்ல. சர்வே எண் 150/24ல் கிணறு இருந்தது என்றால் இல்லை. வாதி இவ்வழக்கில் கிணறு உள்ளதாக தான் கூறியுள்ளார் வழக்கு பற்றிய எந்த விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தற்போது கிணறு எதுவும் கிடையாது. இன்றைய தேதிக்கு தாவா சொத்தில் இருந்த கிணற்றுக்குண்டான மின் இணைப்பு உபயோகத்தில் தான் உள்ளது அந்த மின் இணைப்பினை பயன்படுத்தி பிரதிவாதி பயிர் செய்து வருகின்றார் என்றால் பிரதிவாதிக்கு சொந்தமான அவரது கழனியில் மின் இணைப்பு உள்ளது அதை தான்

அவர் பயன்படுத்தி வருகின்றார். தாவா சொத்து கிராம நத்தம் புறம்போக்கு நிலமாகும். கிராம நத்தம் என்பது புறம்போக்கு நிலம் கிடையாது கிராமத்தில் குடியிருக்கும் பகுதிக்கு தான் கிராம நத்தம் வகைப்பாடு கொடுக்கப்படும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வா.சா.ஆ 2 தாவா சொத்தின் SLR அதில் பழைய சர்வே எண் 17/3 கிராம நத்த கிணறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பழைய சர்வே எண் 17/3ன் புதிய சர்வே எண் 150/24 என்றால் அதைப்பற்றி தெரியாது.

4. பொதுவாக விளை நிலங்களை மக்கள் தொகை அதிகரித்த காரணத்தினால் குடியிருப்பதற்காக கிராம நத்தம் வகைப்பாடாக மாற்றப்பட்டு கிராம மக்களுக்கு கொடுக்கப்படும் என்றால் தெரியாது. அதேபோல் கிராம நத்தம் விரிவடையப்பட்ட சமயத்தில் தாவா சொத்து கிராம நத்தமாக மாற்றப்பட்டு தற்போதும் பிரதிவாதி தான் அந்த சொத்தில் விவசாயம் செய்து கொண்டு வருகின்றார் என்றால் சரியல்ல பிரதிவாதி விவசாயம் எதுவும் செய்யவில்லை. தாவா சொத்து 150/27ல் ஜெயராம நாயூடுவின் வீடு உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்து சர்வே எண் 150/22ல் ஜெயராம நாயூடுவின் வீடு தான் உள்ளது என்றால் சரியல்ல. நானும் வாதிகளும் பிரதிவாதியிடம் பணம் கேட்டு அவர் தராத காரணத்தினால் தான் இவ்வழக்கினை வேண்டுமென்றே பொய்யாக அவர் மீது தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிராமத்திற்கு நிறைய தொகை கொடையாக கொடுத்துள்ளபடியால் அவரிடம் பணம் பெறுவதற்காக பொய்யாக இவ்வழக்கு தொடரப்பட்டு அதில் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பொது சொத்து என்று கூறும் காரணத்தினால் நான் என் தரப்பினராக சேர்க்கப்படவில்லை சாட்சியம் ம்ட்டும் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஊர் பெரியவர்கள்

வைத்து வழக்கு தொடர்ந்தோம் ஆகையால் நான் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. இவ்வழக்கு பிரதிவாதி ஊருக்கு மேற்கு பக்கத்தில் சர்வே எண் 150/25 க்கு உட்பட்ட நிலத்தினை சாலை அமைப்பதற்காக ஊருக்காக இலவசமாக கொடுத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஏற்கனவே அங்கு சாலை உள்ளது.

5. தாவா சொத்து கிராமத்திற்கு பொதுவான இடம் என்பதற்கு உண்டான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எங்களது கிராம நிர்வாக அலுவலர் எதிர்மனுதாரர் மீது தாவா சொத்து குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. எங்களது கிராம பஞ்சாயத்தில் பிரதிவாதி மீது தாவா சொத்தினை அபகரித்துள்ளார் என்று கோரி நடிவடிக்கையோ அல்லது தீர்மானங்களோ ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதைப் பற்றி எனக்குத் தெரியாது. வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தாசில்தார் முன்பு பிரதிவாதி மீது தாவா சொத்து குறித்து நடவடிக்கை எடுக்கும்படி மனு எதுவும் வாதிகளால் மற்றும் ஊர் மக்களால் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

6. இவ்வழக்கில் வட்டாட்சியர் மற்றும் தாசில்தார் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் அவர்கள் தாவா சொத்தின் மீது எந்தவிதமான உரிமையும் கோராத காரணத்தினாலும் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமான படியால் தான் அவர்கள் எதிர்வாதிடம் செய்யாமல் இவ்வழக்கில் தோன்றா தரப்பினராக ஆகியுள்ளார்கள் என்றால் தாவா சொத்து கிராம நத்தம் புறம்போக்கு நிலம். தாவா சொத்து கிராம நத்தம் புறம்போக்காக இருந்தால் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தாவா சொத்தில் இருந்து வெளியேற்று பட்டிருப்பார் இல்லாத காரணத்தினால் தான் எந்த வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை

என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. தாவா சொத்தில் பிரதிவாதி தற்போது இல்லை. தாவாசொத்தில் பிரதிவாதி ஷெட் கட்டியுள்ளார் என்றால் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதி மதில் சுவர் கட்டுவதற்காக 10 அடி உயரத்திற்கு பில்லர் கட்டியுள்ளார் என்றால் இல்லை. இன்றைய தேதியிலும் அந்த பில்லர்கள் உள்ளது என்றால் இல்லை. கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளின் முன்பும் பஞ்சாயத்திற்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான் அதில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பொதுவான குழாய் ஆகும்.

7. தாவா சொத்தின் முன் பக்கத்தில் உள்ள சாலையில் குடிநீர் குழாய் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அது பொதுவான குழாய் ஆகும். அந்த குழாவிற்கு அருகில் வேம்பு செடியாக உள்ளது என்றால் வேப்பமரமாக உள்ளது. அந்த வேப்பமரத்தில் செங்கல் வைத்து சாமி கும்பிட்டு வரப்படுகின்றது என்றால் சரிதான். எனது சாட்சியத்தில் மேலே கூறியுள்ள குழாய் வேப்பமரம் கல் வைத்து கும்பிடப்படும் சாமி அனைத்தும் தாவா சொத்தின் அடுத்து உள்ள சாலையோரம் உள்ளது என்றால் அது கிரம நத்தம் புறம்போக்கு நிலத்தில் தான் உள்ளது. அந்த வேப்பமரம் 10 முதல் 15 ஆண்டுகள் உள்ள மரமாகும். அந்த மரம் வழக்கு தொடர்வதற்கு முன்பு உள்ள மரம் ஆகும். ஆக அந்த மரம் 18 வருடங்கள் வயதான மரம் என்றால் சரியல்ல. அந்த மரம் 3 அல்லது 4 சுத்து இருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதி செல்வந்தர் அவரிடம் இருந்து பணம் பறிக்கும் காரணத்திற்காக இவ்வழக்கு வாதிகளால் தொடரப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஆதாயம் எதிர்பார்த்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து கிணறு உள்ள பகுதி ஆகையால் அங்கு

ஆடு மாடுகள் மேய்க்க முடியாது என்றால் சரியல்ல. அங்கு கிணறு எதுவும் கிடையாது. அங்கு செடி கொடிகள் தான் உள்ளது ஆகையால் ஆடு மாடுகள் மேய்க்க முடியும்.

8. தாவா சொத்தில் ஆடு மாடுகள் மேய்க்க பயன்படுத்தப்பட்டு இருந்தால் அந்த நிலம் மேய்ச்சல் நிலமாக வகைப்பாடு படுத்தப்பட்டு இருக்கும் என்றால் தாவா சொத்து சிறிய பரப்பளவு என்றபடியால் கிராம நத்தம் புறம்போக்காக வகைப்பாடுப்படுத்தப்பட்டு இருக்கிறது. பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள கிணற்றினை மூடி சொத்தினை பயன்பாட்டிற்காக மேன்மைபடுத்தியபடியால் அவரிடம் நாங்கள் பணம் கேட்டு அதை அவர் கொடுக்காத காரணத்தினால் அவர் மீது பொய்யாக இவ்வழக்கினை தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.